**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. STC - 311/2021**

**Deposition of Witness for Prosecution : D.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பெனிட்கரன்** | Caste | : |
| Father/Husband Name | : **பாலசிங்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 19.03.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் புகார்தாரர் வட்டி தொழில் செய்வதாக குறிப்பட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. புகார்தாரர் மோசடியாக என்னுடைய கையெழுத்தை போட்டு கிரைய ஆவணம் பதிவு செய்துள்ளார் என்று கூறியுள்ளதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார்தாரர் அவ்வாறு எந்த மோசடியும் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதேபோல் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் புகார்தாரர் பல நபர்களிடம் வட்டிக்கு பணம் கொடுத்து மோசடியாக ஆவணங்கள் எழுதி வாங்கியுள்ளார் என்று கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம நெருங்கி பழகி 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் என் தொழிலுக்காக ரூபாய் 50 லட்சம் கைமாற்று கடனாக கேட்டேன் என்றால்**

சரியல்ல. அதன் அடிப்படையில் 17.02.2021 ஆம் தேதியில் புகார்தாரர் எனக்கு 49 லட்சம் கைமாற்று கடனாக கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த கடனை நான் 2 மாதங்களில் திரும்பி தந்துவிடுவதாக புகார்தாரரிடம் கூறினேன் என்றால் சரியல்ல. மேற்படி கடனை திருப்பி செலுத்துவதற்காக நான் புகார்தாரருக்கு பின்தேதியிட்ட வழக்கு காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் அந்த காசோலையை வசூலுக்கு போட்டதில் Account Closed என்று காசோலை திருப்பப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கு மூடப்பட்டது என்று தெரிந்தே, புகார்தாரரை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் புகார்தாரருக்கு வழக்கு காசோலையை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பல வருடங்களுக்கு முன்பாக கொடுத்த காசோலையை புகார்தாரர் நிரப்பி தற்பொழுது வழக்கு தொடர்ந்துள்ளார் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய பதில் அறிவிப்பில் கடனுக்காக சொத்தை எழுதி கொடுத்துள்ளதாக சொல்லிவிட்டு என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கடனை பணமாக திருப்பி செலுத்திவிட்டதாக முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடனாக வாங்கிய தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்டத்தின்கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளேன் என்றால் சரியல்ல.